## சாட்சிய வாக்குமூலம்

### மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

அமர்வு வழக்கு எண் 124/2024

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 9 (LW–14) | | |
| பெயர் | குணசேகரன் | நாள் | 23.02.2026 |
| தந்தை பெயர் | [illegible] | தொழில் | Rtd. Police |
| தாலுக்கா | மயிலாடுதுறை | கிராமம் | மணக்குடி |
| | | வயது | 64/2026 |

(குற்றம் சாட்டப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சாட்டப்பட்ட நபர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் செம்பனார்கோவில் காவல் நிலையத்தில் தலைமைகாவலராக பணிபுரிந்து தற்போது பணிஓய்வு பெற்று மணக்குடியில் வசித்து வருகிறேன். கடந்த 13.01.2018 அன்று இரவு 11.00 மணியளவில் செம்பனார் கோவில் காவல் நிலைய குற்ற எண். 14/2018, ச/பி. 174 குவிமுச என்ற வழக்கில் இறந்துபோன கண்ணன் மற்றும் சுகன்யா ஆகியோரின் பிரேத்தை சடலக்கூறாய்வு செய்ய செம்பனார்கோவில் காவல் ஆய்வாளர் வேண்டுகோள் கடிதம் மூலம் என்னை மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பினார். 14.01.2018 அன்று மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு சென்றபோது காவல் துணைக்கண்காணிப்பாளர் கலித்தீர்தான் பிரேத்தின் மீது விசாரணை செய்தார். பிரேத விசாரணை முடித்து பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தவேண்டி பணித்தார். நான் வேண்டுகோளை பெற்று மருத்துவரிடம் மதியம் 12.00 மணியளவில் இறந்தவர்களின் சவத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தினேன். 12.30 மணியளவில் பிரேத பரிசோதனையை தொடங்கினார்கள். பிரேத பரிசோதனை முடித்து பிரேத்தை என்னிடம் ஒப்படைத்தார்கள். மற்றும்

சேகரம் செய்யப்பட்ட உடல் உள்ளுறுப்புகள் மற்றும் தோல் மற்றும் சுகன்யா என்பவரின் பிறப்பிறுப்பிலிருந்து தடயம் சேகரம் செய்யப்பட்டுள்ளதாக தகவல் சொன்னார்கள். பிறகு பிரேத்தை உறவினர் வசம் ஒப்படைத்தேன். இறந்து போன கண்ணன் மற்றும் சுகன்யா ஆகியோரின் பிரேத பரிசோதனையின்போது சேகரம் செய்யப்பட்ட உடல் உள்ளுறுப்புகளை நீதிமன்ற உத்தரவின்படி 22.02.2018 அன்று மயிலாடுதுறை அரசு மருத்துவமனையிலிருந்து தஞ்சாவூர் வட்டாரா தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்து நிலையம் வந்து அறிக்கை செய்தேன். சுகன்யாவின் பிரேத பரிசோதனையின்போது பெண்ணுறுப்பிலிருந்து சேகரம் செய்யப்பட்ட தடயம் மற்றும் சேகரம் செய்யப்பட்ட தோல் ஆகியவற்றை 15.03.2018 அன்று தஞ்சாவூர் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தேன். பிறகு சேகரம் செய்யப்பட்ட தோலை தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் நோயுக்கியல் பிரிவில் ஒப்படைத்தேன். இது சம்பந்தமாக காவல் துணைக்கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

**குற்றம் சாட்டப்பட்ட நபர் தரப்பில் குறுக்கு விசாரணை**

பிரேத பரிசோதனை முடித்து சுமார் ஒரு மாதம் கழித்து தான் சேகரம் செய்யப்பட்ட தடய பொருட்கள் ஆய்வகத்தில் ஒப்படைக்கப்பட்டது என்றால் சரிதான். சேகரம் செய்யப்பட்ட தோல் இரண்டு மாதம் கழித்து தான் பரிசோதனைக்கு ஒப்படைக்கப்பட்டது என்றால் சரிதான். நான் சொல்வது போல் பிரேத விசாரணை மற்றும் தடயங்களை ஒப்படைக்கும் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்படவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யா சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை